

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (3.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.பி. முருகையன் சந்தித்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களின் நலன் சார்ந்த அரசாணைகளை வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்து கோரிக்கை மனு அளித்தார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் சி. குமார், தமிழ்நாடு கிராம நிருவாக முன்னேற்ற அலுவலர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ. பூபதி, தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றியத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் அண்ணா குபேரன், தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ். ரவி ஆகியோர் உடனிருந்தனர்.

### அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்!

# ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடர மக்கள் விருப்பம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 5-

திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும் என்பதே மக்கள் விருப்பமாக உள்ளது என்று அவர்களுடன் அலைபேசியில் பேசும்போது தெரிந்துகொண்டதை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களையும் எண்ணங்களையும் ஒருங்கிணைத்திட ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் ஈடுபட்டுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களைத் தொடர்பு கொண்டு பேசினேன்.**

**அவினாசி ஒன்றியத்தில் மக்களுடன் இருந்த திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ந.தினேஷ்குமார் அவர்கள், அங்கிருந்த மக்களிடம் அலைபேசியை வழங்க, “தமிழ்நாடு தொடர்ந்து தலைநிமிர்ந்து நடைபோட, திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்திட வேண்டும்” என்ற தங்களது விருப்பத்தை உற்சாகத்தோடு என்னிடம் வெளிப்படுத்தினர்!**



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் ஊரெங்கும் தொடக்கம்; உற்சாக வெள்ளத்தில் தமிழ் மக்கள்!







கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீர்சாகிப்பேட்டை பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2025) வீடு, வீடாகச் சென்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி, உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்டார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பொதுக்குழு உறுப்பினர் திருமதி.வே.கமலா செழியன், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், வட்டச் செயலாளர் க.வே.மோகன் உள்பட நிர்வாகிகள், இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திருநெல்வேலி மேலப்பாளையத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தை திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தொடக்கி வைத்து, வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் குறித்து எடுத்துரைத்து, தி.மு.க.வில் இணையுமாறு அழைப்பு விடுத்தனர். இந்த நிகழ்வில், மாவட்டக் கழகச் செயலாளர் அப்துல்வகாப் எம்.எல்.ஏ., மைதீன் கான், மாலை ராஜா, மேயர் ஜெகன் பெரியசாமி, மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முடிவைத்தானேந்தல் ஊராட்சியில் “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தொடக்கி வைத்து, வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து எடுத்துரைத்து, தி.மு.க.வில் இணையுமாறு அழைப்பு விடுத்தார். இந்த நிகழ்வில், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, 29.06.2025 அன்று, லண்டன் அயலக தி.மு.க. ஏற்பாட்டில், லண்டனில் நடைபெற்ற நிகழ்வில் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. கலந்துகொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில், NRTIA UK அமைப்பாளர் செந்தில்குமார், அவைத்தலைவர் பக்தவச்சலம், அயலக உடன்பிறப்புகள் கலந்துகொண்டனர்



மதுரை காமராசர் சாலையில் உள்ள தொழில் வர்த்தக சங்கத்தில் தமிழ்நாடு வணிகர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கான அடையாள அட்டையினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கி விழிப்புணர்வு உரையாற்றினார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார்,மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், வணிகவரி கூடுதல் ஆணையர் தேவேந்திர பூபதி, இணை ஆணையர் கீதா பாரதி ஆகியோர் உடன் உள்ளனர்.